


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 271 | 4 Pages | 30.4.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 271 | 4 பக்கங்கள் | 30.4.2025 | புதன்கிழமை விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி**
**மறைந்தொழுகு மாந்தர் பலர்**

**விளக்கம்:**

**மனத்தில் மாசு இருக்க, தவத்தால் மாண்பு பெற்றவரைப்போல், நீரில் மறைந்து நடக்கும் வஞ்சனைஉடையமாந்தர்உலகில்பலர்உள்ளனர்.**

## கனடாவில் நாடாளுமன்ற தேர்தல்; வாக்குப்பதிவு தொடக்கம்




ஒட்டாவா, ஏப்.30

கனடாவில் 2015ம் ஆண்டு முதல் பிரதமராக இருந்து வந்த ஜஸ்டின் ட்ரூடோ கடந்த ஜனவரி மாதம் தனது பதவியை ராஜினாமா செய்தார். அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்றதையடுத்து கனடா மீதானவரியைஅதிரடியாகஅதிகரித்தார். உள்நாட்டு அரசியல் பிரச்சினை, டிரம்ப் வரி விதிப்பு உள்பட பல்வேறு காரணங்களால் லிபரல் கட்சியை சேர்ந்த ட்ரூடோ பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.

இதையடுத்து, கனடா மத்திய வங்கியின் முன்னாள் தலைவரும், லிபரல் கட்சியைசேர்ந்தவருமானமார்க்கார்னிபுதியபிரதமராகதேர்வுசெய்யப்பட்டார். அவர் கடந்த மாதம் 14ந் தேதி கனடாவின் 24வது பிரதமராக பதவியேற்றார்.

கனடா நாடாளுமன்றத்தின் பதவிகாலம் வரும் அக்டோபர் மாதம் வரை இருக்கும் நிலையில் பிரதமர் மார்க் கார்னி நாடாளுமன்றத்தை கலைத்தார். மேலும், நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்தவும் மார்க் கார்னி அழைப்பு விடுத்தார்.

அதன்படி, ஏப்ரல் 28ம் தேதி (இன்று) கனடா நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, லிபரல் கட்சி சார்பில் பிரதமர் வேட்பாளராக மார்க் கார்னி களமிறங்கினார். கன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் பெர்ரி பொய்லிவ் பிரதமர் வேட்பாளாரக களமிறங்கினார். இருவரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், 343 தொகுதிகளை கொண்ட கனடா நாடாளுமன்றத்திற்கு இன்று தேர்தல் நடைபெற்று வருகிறது. காலை 8.30 மணிக்கு (அந்நாட்டு நேரப்படி) வாக்குப்பதிவு தொடங்கிய நிலையில் மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற 172 இடங்களில் வெற்றிபெற வேண்டும்.பெரும்பான்மைஇடங்களைகைப்பற்றும்கட்சிஆட்சியமைக்கும். அந்த கட்சியின் உறுப்பினர்கள் சேர்ந்து பிரதமரை தேர்ந்தெடுக்க உள்ளனர். தேர்தலில் பதிவாகும் வாக்குகள் இன்றே எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

## இங்கிலாந்து: பாகிஸ்தான் தூதரகத்தின் கண்ணாடி உடைப்பு; இந்தியர் கைது



லண்டன், ஏப்.30

ஜம்மு காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலா தலத்தில் கடந்த 22ம் தேதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்ததாக்குதலில்சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்ட லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதலை தொடர்ந்து இந்தியா , பாகிஸ்தான் இடையே போர் மூளும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில், பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் இந்தியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் முன் கடந்த சில நாட்களுக்குமுன் இங்கிலாந்து வாழ் இந்தியர்கள் போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தை தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாகிஸ்தான் தூதரகம் மீது கல்வீச்சு தாக்குதல் நடைபெற்றது. இந்த தாக்குதலில் தூதரகத்தின் கண்ணாடி உடைக்கப்பட்டது.

பாகிஸ்தான்தூதரகம் மீது தாக்குதல் நடத்திய இங்கிலாந்து வாழ் இந்தியரான அங்கித் (வயது 41) என்பவரை லண்டன் போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அங்கித் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார்.

லண்டனில்உள்ளபாகிஸ்தான்தூதரகம்மீதுகல்வீச்சுதாக்குதல்நடத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## காசாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்; 27 பேர் பலி

காசா சிட்டி, ஏப்.30

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 59 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, பணய கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காசா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது. காசா முனையில் இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், காசா முனையில் இஸ்ரேல் இன்று வான்வழி தாக்குதல் நடத்தியது. காசாவின் பியிட் லஹியா, காசா சிட்டி, கான் யூனிஸ் உள்ளிட்ட பகுதிகளில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் பாலஸ்தீனியர்கள் 27 பேர் உயிரிழந்தனர். இதில் ஹமாஸ் ஆயுதக்குழுவினரும் அடக்கம் என தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேல், ஹமாஸ் போரில் காசாவில் ஹமாஸ் ஆய்தக்குழுவினர் உள்பட 52 ஆயிரத்து 243 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேலே பாம்பு, கீழே நரிகள், குதித்தால் அகழி... பல தடைகளை தாண்டி சாதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஏப்.30

மேலே பாம்பு, கீழே நரிகள், குதித்தால் அகழி, ஓடினால் தடுப்பு சுவர்கள்.. ஒரு பக்கம் மத்திய அரசு, மறுபக்கம் ஆளுநர், நிதி நெருக்கடி என பல தடைகளை தாண்டி சாதனை படைத்து வருவதாகவும், இது ஒரு கட்சியின் அரசல்ல ஒரு கொள்கையின் அரசு என செயல்பட்டு வருவதாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் கூறியுள்ளார்.

தமிழ்நாடு சட்டசபை பட்ஜெட் கூட்டத்தொடரின் இறுதி நாளான இன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அதில் தமிழ்நாடு அரசு படைத்த சாதனைகளை விளக்கிப் பேசிய அவர், காவல்துறையின் கீழ் பல்வேறு அறிவிப்புகளையும் வெளியிட்டார்.

தொடர்ந்து சட்டப்பேரவையில் பேசிய அவர்," மாநில சுயாட்சி கனவை நினைவாக்க குழு அமைக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சராக ஐந்தாவது ஆண்டாக அடியெடுத்து வைக்கும் இந்த வேளையில் இந்த மன்றத்தில் உறு



தியோடு சொல்கிறேன். எனது பயணம் தமிழ்நாடு தமிழர்கள் மாநில உரிமைக்காக தொடரும்.

ஸ்டாலின் என்றால் உழைப்பு உழைப்பு உழைப்பு என தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி என்னை கூறி இருந்தார். இப்போது இருந்திருந்தால் அதனை சாதனை எனக் கூறியிருப்பார். இதுவரை திராவிட மாடல் அரசின் முதல் பாகத்தை தான் பார்த்து இருக்கிறார்கள். 2026 இல் வெர்ஷன் 2.0 லோட் ஆகி கொண்டு இருக்கிறது. இந்தியாவில் நம்பர் 1 மாநிலமாக, 9.6 விழுக்காடு பொருளாதார வளர்ச்சி அடைந்துள்ளது தமிழ்நாடு. தமிழ்நாட்டுக்கு ஓரவஞ்சனையுடன் செயல்படும் ஒன்றிய அரசுதான் இதனை கூறி உள்ளது.

இதுவரை இல்லாத உச்சமாக 15 மில்லியன் டாலர் அளவுக்கு மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு சாதனை படைத்துள்ளது. இது சாதாரண சாதனை அல்ல கடும் உழைப்பால் விளைந்த சாதனை. இதுவரை நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், செய்துள்ள சாதனைகளால் 7வது முறையும் தி.மு.க.தான் ஆட்சி அமைக்கும். திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்திருக்கிற உயரம் இந்தியாவே காணாதது. மேலே பாம்பு கீழே நரிகள் குதித்தால் அகழி ஓடினால் தடுப்பு சுவர் என்று ஒரு பக்கம் ஒன்றிய அரசு மறுபக்கம் ஆளுநர், நிதி என்று எல்லா தடைகளை தாண்டி சாதனை படைத்து வருகிறோம்.

கலைஞர் இருந்தால் என்ன செய்திருப்பாரோ அதனைதான் நான் செய்து வருகிறேன். கலைஞர் எண்ணங்கள்தான் இந்த அரசின் செயல்கள். கடந்த அதிமுக ஆட்சியில் தமிழ்நாடு கட்டாந்தரையில் ஊர்ந்து கொண்டிருந்தது. கல்வித் துறையில் கடந்த 4 ஆண்டுகளில் இடைநிற்றலே இல்லாத நிலை உள்ளது. உயர் கல்வியின் வளர்ச்சி தமிழ்நாட்டில் 47 சதவீதமாக உயர்ந்துள்ளது. நிதி ஆயோக் வெளியிட்ட வளர்ச்சி இலக்க குறியீட்டில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது.

உயர்நிலைப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 47 சதவீதமாக அதிகரித்துள்ளது. நடுநிலைப் பள்ளிகளில் இடைநிற்றலே இல்லை என்ற நிலையை எட்டியுள்ளோம். இந்தியாவில் வறுமை கோட்டுக்கு கீழே 13.2% பேர் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் வெறும் 1.4 சதவீதம் தான் இருக்கிறது. மக்களை தேடி மருத்துவம் திட்டத்தால் ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்பட்டது தெரிய வந்துள்ளது. இந்தியாவிலேயே அதிக மருத்துவர்கள், மருத்துவ மாணவர் இடங்கள் இருப்பது தமிழ்நாட்டில் தான். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்று கூறுபவர்களுக்கு நான் கூறுவது இது மணிப்பூரோ காஷ்மீரோ அல்ல தமிழ்நாடு என்பதை மறந்து விடாதீர்கள்" என்றார்.

## உலகப்புகழ்பெற்ற மீனாட்சியம்மன் கோவில் சித்திரை பெருவிழா கொடியேற்றத்துடன் கோலாகலமாக தொடங்கியது மகிழ்ச்சியில் திளைத்த பக்தர்கள்.



உலகப்பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெறும் கோவிலாகும்.

இந்த விழாக்களின் முக்கிய விழாவான சித்திரை திருவிழா இன்று காலை மிதுன லக்கனத்தில் சுவாமி சன்னதி முன்பாக உள்ள கம்பத்தடி மண்டபத்தில் உள்ள தங்க கொடிமரத்தில் கொடியேற்ற நிகழ்ச்சியுடன் வெகுவிமர்சையாக தொடங்கியது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தங்கமுலாம் பூசப்பட்ட கொடி மரத்தில் தர்ப்பை புற்களை வைத்து வெண்பட்டால் சுற்றப்பட்டிருந்தன. விநாயகர், முருகன், சண்டிகேஸ்வரர் முன்னே எழுந்தருளிய நிலையில் அலங்கரிக்கப்பட்ட கொடிமரத்தின் முன்பாக சிறப்பு அலங்காரத்தில் மீனாட்சிஅம்மனும், சுந்தரேசுவரர் பிரியாவிடையுடன் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

கொடியேற்றத்தை முன்னிட்டு கம்பத்தடி மண்டபம் முழுவதும் பல்வேறு வண்ண மலர்களாலும், மக்காச்சோளம் உள்ளிட்ட நவதானியங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

வேதமந்திரங்கள் முழங்க சிறப்பு பூஜைகள் நடைபெற்ற பின்னர் தங்க கொடி மரத்தில் பிரமாண்டமான மாலை ஏற்றப்பட்டு மலர்கள் தூவ கொடிகம்பத்திற்கு பூஜிக்கப்பட்ட நீரினை கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டு கொடியேற்ற விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. சித்திரை திருவிழா கொடியேற்றியபோது பக்தர்கள் பக்தி முழக்கங்களை எழுப்பியவாறு சுவாமி தரிசனம் செய்தனர்

கொடியேற்றம் முடிவடைந்த நிலையில் கம்பத்தடி மண்டபத்தில் எழுந்தருளிய மீனாட்சியம்மனுக்கும் சுந்தரேசுவரர் பிரியாவிடை சுவாமிக்கும் சிறப்பு தீபாரதனை காண்பிக்கப்பட்ட பின்னர் சுந்தரேசுவரர் பிரியாவிடையுடனும், மீனாட்சியம்மனும் கோவில் 2 ஆம் பிரகாரத்தில் கோவில் யானை மற்றும் பசு முன்னே செல்ல மேளாதாள மங்கள வாத்தியங்கள் முழங்க 3முறை வலம்வந்து பின்னர் மடப்ப ள்ளியில் சுவாமியும், அம்மனும் எழுந்தருளினர்.

கோவில் வளாகத்தில் சுவாமியும் அம்மனும் உலாவந்தபோது வழிநெடுகிலும் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

கொடியேற்றுத்துடன் தொடங்கிய சித்திரை திருவிழா இன்று தொடங்கி 12 நாட்கள் திருவிழாவாக நடைபெறவுள்ளது. சித்திரை திருவிழாவின் போது நாள்தோறும் காலை மற்றும் மாலைகளில் நான்கு மாசி வீதிகளில் கற்பக விருட்சம் சிம்ம வாகனம், பூத அன்னவாகனம், கைலாசபர்வதம், காமதேனு, தங்கப்பல்லக்கு , தங்க குதிரை, ரிஷப வாகனம், நந்திகேசுவரர், யாளி , வெள்ளி சிம்மாசனம் என பல்வேறு வாகனங்களில் சுவாமியும் அம்மனும் எழுந்தருளும் வீதி உலா நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் மாசி வீதிகள் முழுவதும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வீதிஉலாவின் போது சாமி தரிசனம் செய்வர்.

விழாவின் சிகர நிகழ்வாக வரும் மே 6 ஆம் தேதி மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம், மே7 ஆம் தேதி திக்குவிஜயமும், மே 8 ஆம் தேதி மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம், மே9 ஆம் தேதி தேரோட்டமும், மே 10 ஆம் தேதி த நடைபெறவுள்ளது. இதனைத்தொடர்ந்து 10 ஆம் தேதி தெய்வேந்திர பூஜையுடன் விழா மீனாட்சியம்மன் கோவிலின் இந்த ஆண்டு சித்திரைத் திருவிழா நிறைவடையவுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மதுரை கள்ளழகர் கோவில் சித்திரை திருவிழாவின் சிகர நிகழ்வாக கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் நிகழ்வு வரும் மே12ஆம் தேதி அதிகாலை நடைபெறவுள்ளது.

சித்திரை திருவிழா கொடியேற்றத்தில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தது மகிழ்ச்சி அளிப்பதாக பக்தர்கள் தெரிவித்தனர்.

## மதுரையில் 4 வயது சிறுமி உயிரிழந்த மழலையர் பள்ளிக்கு சீல்: குழந்தையின் தந்தை கண்ணீர் மல்க பேட்டி

குழந்தை தண்ணி தொட்டியில் விழுந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தான் கூறினார்கள் குழந்தை உயிரிழந்ததை தெரிவிக்கவில்லை குழந்தையின் தந்தை கண்ணீர் மல்க பேட்டி




மதுரை கேகே நகர் பகுதியில் இயங்கி வரக்கூடிய ஸ்ரீ மழலையர் பள்ளியில் கோடைகால பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இந்த மழலையர் பள்ளியை திவ்யா என்பவர் நடத்தி வருகிறார், கோடைகால பயிற்சி முகாமில் நான்கு ஆசிரியர்கள், தாளாளர் ஆகியோர் மதுரை மாநகரில் உள்ள பல்வேறு பள்ளியில் பயிலக்கூடிய மற்ற பள்ளி மழலையர்கள் இந்த கோடைகால சிறப்பு வகுப்பில் பயின்று வருகிறார்கள். மதுரை உத்தங்குடி பகுதியைச் சேர்ந்த அமுதன் என்பவரது நான்கு வயது மகள் ஆருத்ரா ஸ்ரீ இளர் மழலையர் பள்ளியில் தனது நண்பர்களுடன் பள்ளி வளாகத்தில் விளையாடிக் கொண்டிருந்தபோது பள்ளி வளாகத்தில் சுமார் 12 அடி ஆழம் கொண்ட தண்ணீர்தொட்டிக்குள் எதிர்பாராத விதமாக உள்ளே விழுந்துள்ளார்.

இதைக் கண்ட மற்ற குழந்தைகள் உடனடியாக மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவிக்க உடனடியாக அங்கு ஓடி வந்த ஆசிரியர்கள் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர் உடனடியாக அரை மணி நேரம் போராடி தொட்டிக்குள் கிடந்த சிறுமியை மீட்டு பள்ளி அருகே 100 மீட்டர் தொலைவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தனர்.

தொடர்ந்து மீட்கப்பட்ட சிறுமிக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் குழந்தை அதிகளவு தண்ணீர் குடித்ததால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேலும் இச்சம்பம் தொடர்பாக அண்ணா நகர் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து தாளாளர் திவ்யா மற்றும் மழலையர் பள்ளி ஆசிரியர்கள் நான்கு பேர் உட்பட ஐந்து பேரை அண்ணாநகர் போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் குழந்தை உயிரிழந்தது தொடர்பாக பள்ளி நிர்வாகத்தின் தரப்பில் இருந்து உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்காமல் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது சம்பவம் தொடர்பாக பள்ளியில் பயிலும் கூடிய மற்ற மாணவர்களின் பெற்றோருக்கு தகவல் தெரிவிக்க உடனடியாக மற்ற குழந்தைகளின் பெற்றோர்கள் உடனடியாக பள்ளிக்கு வருகை தந்து குழந்தைகளை அழைத்துச் சென்றனர்.

மழலையர் பள்ளியில் கோடைகால பயிற்சியின் போது 12 அடி ஆழம் கொண்ட தண்ணீர் தொட்டிக்குள் ஆருத்ரா 4 வயது குழந்தை தண்ணீர் தொட்டிக்குள் விழுந்து உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. முறையாக அனுமதியுடன் மழலையர் பள்ளி இயங்கியதா என்பது குறித்தும் முறையான பாதுகாப்பு வசதிகள் உடன் பள்ளி இயக்கப்பட்டதா என்பது குறித்தும் போலீசார் மற்றும் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனைத் தொடர்ந்து மதுரையில் 4 வயது சிறுமி ஆருத்ரா உயிரிழத்த மழலையர் பள்ளிக்கு சீல் வைக்கப்பட்டது.

குழந்தையின் தந்தை கண்ணீர் மல்க பேட்டி

குழந்தை தண்ணி தொட்டியில் விழுந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தான் கூறினார்கள். குழந்தை உயிரிழந்ததை கூறவில்லை . பள்ளி தரப்பிலிருந்து தற்போது வரை யாரும் என்னிடம் பேசவில்லை பார்க்க கூட வரவில்லை என்ன உயிரிழந்த சிறுமியின் தந்தை வேதனையாக கூறினார்.



# கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகள் *விரைந்து குடோனுக்கு மாற்ற கோரிக்கை



ராணிப்பேட்டை, ஏப்.30

ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல்மூட்டைகளை விரைவில் குடோனுக்கு மாற்றநடவடிக்கைஎடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் நெல் அறுவடை காலம் தொடங்கி விவசாயிகள் பலர் தங்களது நிலத்தில் பயிரிடப்பட்ட நெல்மணிகளை அறுவடை செய்து வருகின்றனர். பின்னர், அந்த நெல்மணிகளை ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் அரசின் நிர்ணயித்த விலையில் விவசாயிகள் நேரடி விற்பனை செய்து வருகின்றனர்.

தொடர்ந்து, விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை சிவில் சப்ளை குடோன்களுக்கு மாற்ற ஒப்பந்த அடிப்படையில் எடுக்கப்பட்ட லாரிகள் மூலமாக எடுத்து செல்லப்படுகிறது.

ஆனால், போதுமான அளவுக்கு லாரிகள் இல்லாததால், கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் நேரடி கொள்முதல் நிலையங்களில் தேக்கமாகி உள்ளது. இதனால் மற்ற விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. சில நேரங்களில் மழையில் நனைந்து நெல் மணிகள் முளைப்பு விடும் நிலைக்கு தள்ளப்படுவதால் விவசாயிகள் வேதனைக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை விரைவில் குடோன்களுக்கு மாற்ற மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மீஞ்சூரில் இருசக்கர வாகனங்கள் திருடிய வழக்கில் பிரமுகர் உட்பட 4 பேர் கைது



மீஞ்சூர், ஏப்.30

மீஞ்சூரில் இருசக்கர வாகனங்கள்திருடியவழக்கில் இந்து முன்னணி பிரமுகர் வெங்கடேஷ்ராஜா உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர். சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டனர். இருசக்கர வாகனங்களை திருடி அங்குள்ளபழையஇரும்பு பொருட்கள் விற்பனை செய்யும் கடையில் கொடுத்து பாகங்களை பிரித்து விற்பனை செய்தது தெரிய வந்தது.

# சேலம் பெரியார் பல்கலையில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் விசாரணை



சேலம், ஏப்.30

சேலம் பெரியார் பல்கலை.நூலகர், உடற்கல்வி இயக்குநரிடம் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெரியார்பல்கலைக்கழகத்தில் போதிய கல்வித் தகுதி இல்லாத நபர்களை பணி நியமனம் செய்வதாக புகார் எழுந்ததை தொடர்ந்து விசாரணை நடக்கிறது.

# பாணாவரம் அருகே கலப்பு உரம் வாங்க நிர்பந்திக்கும் தனியார் உரக்கடைகள்



பாணாவரம், ஏப்.30

பாணாவரம் அருகே உள்ள தனியார் உரக்கடைகளில் கலப்பு உரம் வாங்க விவசாயிகளை நிர்பந்திப்பதாக புகார் எழுந்துள்ளது. பாணாவரம் அடுத்த மகேந்திரவாடியில் தனியார் உரக்கடை உள்ளது.

இந்த கடையில் கோடம்பாக்கம், வெளிதாங்கிபுரம், பாலகிருஷ்ணாபுரம், மோட்டூர், கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் உள்ள விவசாயிகள் உரங்களை வாங்கி செல்வது வழக்கம்.

தற்போது, இந்த உரக்கடையில் கலப்பு உரம் வாங்கினால் மட்டுமே யூரியா உரம் வழங்கப்படும் என அடாவடியாக பேசி கூடுதல் உரம் வாங்க விவசாயிகளை நிர்பந்தப்படுத்துவதாக புகார் எழுந்துள்ளது. பணம் உள்ளவர்கள் வேறு வழியின்றி கலப்பு உரங்களை கூடுதலாக வாங்கி சென்றாலும் சிறு, குறு விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். இதனால் சிறு விவசாயிகள் பாணாவரம், நெமிலி, வேடந்தாங்கல் பகுதிகளுக்கு சென்று தங்களுக்கு வேண்டிய உரங்களை மட்டும் வாங்க நெடுந்தூரம் செல்லும் நிலை உள்ளது.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பெரும்பாலான விவசாயிகள் யூரியா, காம்ப்ளக்ஸ் உரங்களுடன் சேர்த்து கலப்பு உரங்களையும் கலந்து பயிர்களுக்கு தெளிப்பது வழக்கம். ஆனால், கலப்பு உரங்களின் விலை அதிகமாக இருப்பதால் யூரியா, காம்ப்ளக்ஸ் உரங்களை மட்டும் பயிர்களுக்கு வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். மகேந்திரவாடி உட்பட சில தனியார் உரக்கடையில் கலப்பு உரம் வாங்கினால் மட்டுமே யூரியா உரம் கிடைக்கும் என கட்டுப்பாடு விதிக்கின்றனர்.

ஏனென்றால் யூரியா உரத்தை விட கலப்பு உரத்தில்தான் வியாபாரிகளுக்கு லாபம் அதிகம். இதனால் எங்களை நிர்பந்திக்கின்றனர்.

மேலும், உரங்களை கூடுதல் விலை வைத்து விற்பதால் பாதிக்கப்படுகிறோம். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விவசாயிகளை கூடுதல் உரம் வாங்க நிர்பந்தப்படுத்தும் உரக்கடைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# குற்ற சம்பவங்களை தடுக்க இளைஞர்கள் தெருக்களில் கும்பலாக சுற்றித் திரிவதை தவிர்க்க வேண்டும்: ஆறுமுகநேரி போலீசார் அறிவுரை



ஆறுமுகநேரி, ஏப்.30

காயல்பட்டினம், ஆறுமுகநேரி பகுதிகளில் ரோந்து பணியின் போது இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் போலீசார் அறிவுரை வழங்கினர்.

ஆறுமுகநேரி, காயல்பட்டினம் பகுதிகளில் இளைஞர்கள் மற்றும் சிறார்கள் குற்ற சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இப்பகுதிகளில் ஆறுமுகநேரி போலீசார் பகல் மற்றும் இரவு நேரங்களில் ரோந்து பணியை அதிகரித்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஆறுமுகநேரி காமராஜபுரம், பாரதிநகர் உள்ளிட்ட பகுதிகளில் எஸ்.ஐ. வாசுதேவன் தலைமையில் தலைமை காவலர் ரவிசங்கர், காவலர்கள் முத்துக்குமார், சண்முகம் ஆகியோர் இரவு ரோந்து பணி மேற்கொண்டனர்.

அப்போது காமராஜபுரத்தில் உள்ள வாலிபால் மைதானம் அருகே இளைஞர்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் கும்பலாக அமர்ந்து பேசி கொண்டிருந்தனர். போலீசார் வருவதை கண்டதும் கூட்டம் கலைந்து ஒரு சிலர் ஓட்டம் பிடித்தனர். உடனடியாக எஸ்ஐ வாசுதேவன் அனைவரையும் அழைத்து விசாரித்தார். பின்னர் விளையாட்டும் கல்வியும் மட்டுமே ஒருவரின் உடல் ஆரோக்கியத்திற்கும் மனிதர்களின் உயர்வுக்கும் வழி வகுக்கும்.

எனவே தேவை இல்லாமல் தெருக்களில் கும்பலாக அமர்வது மற்றும் சுற்றி திரிவதை தவிர்க்க வேண்டும். மேலும் கும்பலாக செயல்படுவதாலும் கும்பலாக இருந்து செல்போனில் அதிக நேரத்தை செலவிடுவதாலும் தேவையற்ற குற்ற சம்பவங்கள் ஏற்படும் நிலை ஏற்படும்.

எனவே விளையாடுவதற்கு மட்டுமே ஒன்று சேர வேண்டும் மற்ற நேரங்களில் கும்பலாக சுற்றி திரியக்கூடாது என விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அறிவுரை வழங்கினர்.

மேலும் போலீசார் பொதுமக்கள் நல்லுறவை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ள இச்செயலை பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர்.

# ஆற்காடு அருகே புகையிலை பொருள் விற்ற 4 கடைகளுக்கு அபராதம்; சுகாதாரத்துறையினர் நடவடிக்கை



ஆற்காடு, ஏப்.30

ஆற்காடு அருகே புகையிலை பொருட்கள் விற்ற 4கடைகளுக்குசுகாதாரத்துறையினர் அபராதம் விதித்தனர். ஆற்காடு வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சொக்கலிங்கம் தலைமையில் சுகாதார ஆய்வாளர்கள் சத்யநாராயணன், ஜெயக்குமார், சீனிவாசன், சதீஷ்குமார் ஆகியோர் கொண்ட குழுவினர் தாஜ்புரா பகுதியில் நேற்று ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, அங்கு புகையிலை பொருட்களை பதுக்கிவிற்ற,புகைபிடிக்க அனுமதித்த 4 கடைகளுக்கு தலா ரூ.100 அபராதம் விதித்தனர்.

மேலும், புகையிலை பொருட்கள் விற்கவோ, புகை பிடிக்கவோ அனுமதிக்க கூடாது என்று எச்சரித்து, புகை பிடிக்க தடை செய்யப்பட்ட இடம் என்ற அறிவிப்பு பலகையை வைக்க உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தினர்.

# திண்டிவனம் சுற்றுவட்டார பகுதிகளில் குப்பைகளில் தீ வைப்பதால் பொதுமக்கள் அவதி



திண்டிவனம், ஏப்.30

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் மற்றும் சுற்று வட்டாரபகுதிகளில்கடைகளின் கழிவுகள் மற்றும் குப்பைகளை கொட்டி தீ வைப்பதால் பல்வேறு பகுதிகளில் புகை மூட்டம் ஏற்படுவதால் வாகன ஓட்டிகள் மிகவும் அவதி அடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று மர்ம நபர்கள் சிலர் ஜக்காம்பேட்டை அருகே திருச்சிசென்னை தேசிய நெடுஞ்சாலையில் குப்பைகளுக்கு தீ வைத்ததால் அப்பகுதியில் தீ வேகமாக பரவி சாலையில் வெப்ப அலை வீசியது.

இது குறித்து தகவல் அறிந்து வந்த திண்டிவனம் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் அலுவலர் முரளி தலைமையிலான தீயணைப்புதுறையினர் தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதே போல் வெள்ளிமேடுபேட்டை சமத்துவபுரம் அருகே குடியிருப்பு அருகில் குப்பை குவியலுக்கு மர்ம நபர்கள் தீ வைத்ததால் குடியிருப்பு வாசிகள் அவதி அடைந்தனர்.தகவல்அறிந்துசென்ற தீயணைப்பு துறையினர் உடனடியாக தீயை அணைத்து கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

வெயில் காலத்தில் இது போன்று குப்பைகளுக்கு தீ வைப்பதால் பெரும் தீ விபத்து அபாயம் ஏற்படும் என்று தீயணைப்பு துறையினர் அறிவுறுத்திய போதும் பொதுமக்கள் அதை கடைபிடிக்காததால் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதாகவும் நகராட்சி மற்றும் ஊராட்சி நிர்வாகம் குப்பைகழிவுகளைமுறையாக அகற்ற வேண்டும் என்று தீயணைப்பு துறையினர் தெரிவித்துள்ளனர்.

# ராசா மிராசுதார் மருத்துவமனையில் கட்டாயப்படுத்தி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாக சர்ச்சை



தஞ்சாவூர், ஏப்.30

ராசா மிராசுதார் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் நோயாளிகளை காப்பறும் போது உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த தற்காலிக பணியாளர்களை கட்டாயப்படுத்தி டிஸ்சார்ஜ் செய்துள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தஞ்சாவூரில் உள்ள 100 ஆண்டுகள் பழமையான ராசா மிராசுதார் மருத்துவமனையில் கடந்த 25ம் தேதி தீ விபத்து ஏற்பட்டது. துரிதமாக செயல்பட்டு 54 நோயாளிகள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு வேறு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டனர்.

இதனால் பெரிய அளவில் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இந்த விபத்தின்போது நோயாளிகளை காப்பாற்றும் பணியில் ஈடுபட்ட தற்காலிக ஒப்பந்த தொழிலாளர்கள் 31க்கும் மேற்பட்டவர்கள் உடல் நிலை பாதிக்கப்பட்டு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களை கட்டாயப்படுத்தி நேற்று டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பப்பட்டதாககுற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் கண்ணன் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர் அவர் கூறும் போது.

தீ மற்றும் புகை மண்டலத்திற்குள் நுழைந்து போராடி 50க்கும் மேற்பட்ட நோயாளிகள், குழந்தைகளை தற்காலிக பணியாளர்கள் மீட்டுள்ளனர். இதில் 31பேர் புகையை சுவாசித்ததால் உள்ளுறுப்புகள் பாதிக்கப்பட்டு சிகிச்சையில் உள்ளனர்.

இதில் 2பேர் ஆபத்தான நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தங்கள் உயிரை பணயம் வைத்து போராடிய ஊழியர்கள் கவனிப்பாரற்று கிடப்பது கவலைக்குரியதாகும். இவர்களது பாதிப்பை வெளியில் தெரிவிக்கக் கூடாது என்று மிரட்டப்படுவதும் மிக அவலமான நடவடிக்கை என அவர் கூறியுள்ளார்.

# ஊட்டி படகு இல்ல நடைபாதை ஓர தடுப்புகளை சீரமைக்க கோரிக்கை



ஊட்டி, ஏப்.30

ஊட்டி படகு இல்ல சாலை நடைபாதை ஓரத்தில் உள்ள தடுப்புகளில் இரும்பு கம்பி அலங்காரங்கள் அமைக்கப்படாமல் உள்ளதால் பொலிவின்றி காட்சியளிக்கிறது.நீலகிரி மாவட்டம் ஊட்டி மத்திய பஸ்நிலையம்பின்புறமும் ஊட்டி ஏரி அமைந்துள்ளது. இதில் சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள படகு இல்லம் உள்ளது. ஊட்டி வரக்கூடிய சுற்றுலா பயணிகள் ஏரியில் படகு சவாரி செய்யாமல் செல்வதில்லை.

இந்நிலையில் படகு இல்ல சாலையோர நடைபாதை சீரமைக்கும் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்டது. அப்போது நடைபாதையில் சேதமடைந்த அலங்கார கற்கள் அகற்றப்பட்டு புதிய கற்கள் பதிக்கப்பட்டது. மேலும் ஓரத்தில் அலங்கார தடுப்புகள் அமைக்கப்பட்டன.

இவற்றில் பல இடங்களில் இரும்பு அலங்கார கம்பிகள் அமைக்கப்படாமல், அமைக்கப்பட்ட சில இடங்களில் இந்த அலங்கார கம்பிகள் திருடு போயுள்ளன. இதனால் பொலிவிழந்து காட்சியளிக்கிறது. எனவே சுற்றுலா பயணிகள் நலன் கருதி அலங்கார தடுப்புகளை சீரமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# திருப்பத்தூர் பஸ் நிலையத்தில் பழுதாகி நின்ற அரசு பஸ்சை தள்ளிய பயணிகள்



திருப்பத்தூர், ஏப்.30

திருப்பத்தூர் பஸ் நிலையத்தில் நேற்று பழுதாகி நின்ற அரசு பஸ்சை பயணிகள் தள்ளி ஸ்டார்ட் செய்யும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அங்காளம்மன் கோயிலில் அமாவாசையன்று நடக்கும் சிறப்பு பூஜையில் கலந்து கொள்ள திருப்பத்தூர், வேலூர் உட்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் செல்வது வழக்கம்.

அதன்படி, சித்திரை மாத அமாவாசையான நேற்று மேல்மலையனூருக்கு செல்ல திருப்பத்தூர் புதிய பஸ் நிலையத்தில் ஏராளமான மக்கள் வந்தனர். பின்னர், அங்கு தயார் நிலையில் இருந்த அரசு பஸ்சில் ஏறி காத்திருந்தனர். ஆனால், பஸ் புறப்பட்டபோது திடீரென பழுதாகி நின்றது.

இதையடுத்து, பஸ்சில் இருந்த பயணிகள் 10க்கும் மேற்பட்டோர் கீழே இறங்கி நடத்துனருடன் சேர்ந்து பஸ்சை தள்ளிச் சென்று ஸ்டார்ட் செய்தனர். தற்போது இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி பரவி வருகிறது.

# குன்னூர் அருகே சாலையோரங்களில் சிதறிக்கிடக்கும் குப்பைகளால் நோய் பரவும் அபாயம்



குன்னூர், ஏப்.30

குன்னூர்அருகேசாலையோரங்களில் சிதறிக்கிடக்கும் குப்பைகளால் நோய் பரவும் அபாயம்ஏற்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே மேலூர் ஊராட்சிக்கு உட்பட்ட தூதூர் மட்டம் பகுதியில் சுமார் 300 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது.

அங்கு சேகரிக்கப்படும் குப்பைகள், அங்குள்ள தூய்மை பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சேகரிக்கப்பட்டு வந்தனர்.

ஆனால் கடந்த சில நாட்களாக தூய்மை பணியாளர்கள் அப்பகுதியில் குப்பை சேகரிக்க வராததால் அங்குள்ள கிராம மக்கள்குப்பைகள்சாலையில் கொட்டி செல்வதாக, வாகன ஓட்டிகள் மத்தியில் புகார்கள் எழுந்துள்ளது. குறிப்பாக அந்த கிராமத்தின் நுழைவாயிலில் வைக்கப்பட்டிருந்த குப்பை தொட்டிகள் முறையாக பராமரிப்பு இல்லாததால் குப்பைத்தொட்டி உடைந்து வீணானது.

இதனால் கிராம மக்கள் குப்பைகளை சாலையோரங்களில் கொட்டி செல்வதால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி அருகே உள்ள வனப்பகுதியில் இருந்து வெளியேறும் வனவிலங்குகள் இதை உட்கொள்வதோடு, அங்கு சுற்று திரியும் வளர்ப்பு பிராணிகளும் உட்கொண்டு உயிரிழந்து வருகிறது.

எனவே சம்பந்தப்பட்ட நிர்வாகம் அப்பகுதியில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை முறையாக அகற்றி, அங்கு வைக்கப்பட்டிருக்கும் குப்பை தொட்டிகளை சீரமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கும்பகோணம் அருகே அரசு பள்ளி வகுப்பறையில் தீ விபத்து



கும்பகோணம், ஏப்30

கும்பகோணம் அருகே கீழக்கொருக்கை அரசு உயர்நிலைப்பள்ளி மர்ம நபர்கள் வைத்த தீயால் வகுப்பறை எரிந்து சேதமானது.கும்பகோணம் அருகே கீழக்கொருக்கை அரசு உயர்நிலைப் பள்ளியில் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து சுமார் நூற்று முப்பதுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

இப்பள்ளி 1937ல் கட்டப்பட்ட பழமையான வகுப்பறைகள் கொண்டதாகும். இது வாய்க்கால் ஓரமாக இருப்பதால் மழைக்காலங்களில் பல்வேறு விஷ ஜந்துக்கள் நடமாடும் என்பதால் மாணவர்கள், ஆசிரியர்கள் அச்சத்துடனே இருந்து வந்ததாக தெரிகிறது.

அதோடு பாதுகாப்பில்லாத பள்ளியின் வகுப்பறைக்கு பின்புறத்தை சிலர் மது அருந்தும் இடமாகவும் பயன்படுத்தி வருகிறார்கள். மது அருந்தி விட்டு அங்கேயே பாட்டில்களை போடுவதும் வாடிக்கையாக இருந்தது.

இந்நிலையில் பள்ளி கோடை விடுமுறை என்பதால் மாணவர்கள் நடமாட்டம் இல்லாத போது முழு நேரமும் பள்ளி வளாகத்தில் சமூக விரோத செயல்களில் பலர் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திடீரென்று பள்ளி வகுப்பறை, தலைமையாசிரியர் அறை தீப்பற்றி எரிந்தது.

அப்போது அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் அளித்ததன் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத்துறையினர் தீயை அணைத்தனர். ஆனாலும் வகுப்பறையில் இருந்த உள்ள பர்னிச்சர்கள், மாணவர்கள் அமரும் டெஸ்க், பெஞ்ச் மற்றும் ஆய்வக உபகரணங்கள், அங்குள்ள ஆவணங்கள் மாணவிகளுக்கான நாப்கின்கள் என அனைத்தும் எரிந்து சாம்பலானது.

சமூகவிரோதிகள் பள்ளி கட்டிடத்தின் சுற்றுப்புறத்தில் மது அருந்தி, புகைபிடிப்பதால் இத்தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொதுமக்கள் தெரிவித்தனர். மிகவும் பழமையான இந்த பள்ளிக்கு பாதுகாப்பான பள்ளி கட்டிடங்கள் கட்டித்தர வேண்டும் என பொதுமக்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பெரியார் பல்கலை. நூலகரிடம் லஞ்ச ஒழிப்பு போலீஸ் விசாரணை



சேலம், ஏப்.30

சேலம் பெரியார் பல்கலைக்கழக நூலகர், உடற்கல்வி இயக்குனரிடம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். பெரியார் பல்கலைக்கழகத்தில் போதிய கல்வித் தகுதி இல்லாத நபர்களை பணி நியமனம் செய்வதாக 51 குற்றச்சாட்டு எழுந்தது. முறைகேடாக நூலகர் நியமனம் நடைபெற்றதாக பல்கலை. தொழிலாளர் சங்கத்தினர் லஞ்ச ஒழிப்புத்துறைக்கு புகார் கடிதம் அளித்தனர். புகாரின்பேரில் பல்கலை. நூலகர் ஜெயபிரகாஷ், உடற்கல்வி இயக்குனர் வெங்கடாசலம் ஆகியோரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

# குரங்குகளின் தாகம் தணிக்க திருமலை தொட்டிகளில் தண்ணீர் நிரப்பும் பணி



திருச்செங்கோடு, ஏப்.30

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில் மலையில் குரங்குகள், சிறு விலங்குகள் வாழ்ந்து வருகின்றன. தற்போது கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது.

மலையில் ஆங்காங்கே உள்ள சுனைகளில் மட்டுமே சற்று தண்ணீர் உள்ளது. மழை பெய்தால் மட்டுமே சுனைகளில் தண்ணீர் போதிய அளவு வரும். கோடை வெயில் சுட்டெரிப்பதால் குரங்குகள், சிறு விலங்குகள் தண்ணீர் இன்றி சிரமப்படுவதை தவிர்க்க, சமூக ஆர்வலர்கள் சிலர் ஒருங்கிணைந்து மலைப்பாதையில் ஆங்காங்கே சிறு தண்ணீர் தொட்டிகளை நிறுவி தினசரி காலை அடிவாரத்தில் இருந்து, டூவீலர்களில் தண்ணீர் கொண்டு சென்று, தொட்டிகளில் ஊற்றி குரங்குகளின் தாகத்தை தணித்து வருகின்றனர்.

கடந்த 50 நாட்களாக இவவாறு தண்ணீர் வழங்கி வருகின்றனர். மேலும் பழங்களை கொண்டு வந்து தினசரி குரங்குகளுக்கு கொடுத்து வருகின்றனர். தன்னார்வலர்களின் இந்த தாகம் தணிக்கும் முயற்சிக்கு பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது. பொதுமக்கள் தாமாக முன்வந்து பழங்களையும், தண்ணீரும் வழங்கி வருகின்றனர்.

# காலணியை வைத்து கள்வரை கண்டுபிடித்த சென்னை கமிஷனருக்கு சல்யூட்: திமுக எம்எல்ஏ உதயசூரியன் பேச்சு



சட்டப்பேரவையில் காவல், தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை மானியக்கோரிக்கையின் போது சங்கராபுரம் தா. உதயசூரியன் (திமுக) பேசியதாவது: உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அலசி ஆராய்ந்து பார்த்து, விமான நிலையத்தில் கள்வர்களை கண்டுபிடித்த போலீசார். தமிழ்நாடு போலீசார் தான். அந்தக் காலத்திலேயே காலிலிருந்த சிலம்பைத் திருடியது, கோவலன் அல்ல என்பதை அப்போதே காவலர்கள் சுட்டிக்காட்டியதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டுகிறேன். அப்படி காலணியை வைத்து, கள்வரைக் கண்டுபிடித்த சென்னை கமிஷனருக்கு ஒரு சல்யூட்டை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புலனாய்வுத் துறையிலும் சரி, சட்டம் ஒழுங்கைப் பேணிக் காப்பதிலும் சரி, திராவிட மாடல் ஆட்சியில் சிறப்பாக செயல்படுகிறது. சின்ன சேலத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க 35 சென்ட் இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த ஆண்டே அதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் கட்டிக்கொடுக்க வேண்டும். பொன்பரப்பட்டு கிராமத்திற்கு அருகே அமைந்துள்ள பாப்பாங்கால் ஓடை குறுக்கே உள்ள அணைக்கட்டு மற்றும் தலைப்பு மதகினை புனரமைத்து தர வேண்டும். அவ்வாறு அவர் பேசினார்.

# பெண் காவலரை கத்தியால் குத்தியவருக்கு 5 ஆண்டு சிறை

நெல்லை, ஏப்.30

நெல்லையில் பெண் எஸ்.ஐ. மார்க்கிரேட் தெரசா என்பவரை கத்தியால் குத்தியவருக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2022ல் தன்மீது வழக்கு பதிவு செய்ததாக மார்க்கிரேட் தெரசாவை ஆறுமுகம் என்பவர் கத்தியால் குத்தியுள்ளார்.

ஆறுமுகத்துக்கு 5 ஆண்டு சிறையுடன் ரூ.13,500 அபராதம் விதித்து நெல்லை மகிளா நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உத்தரவிட்டது.

# ‘போலீஸ் அக்கா’ திட்டத்தில் 2024ல் 1,66,337 பயனர்கள் பதிவு


காவல்துறை மானிய கோரிக்கையின் போது தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்க குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்புடைய இணையவழி குற்றங்கள் மற்றும் உதவி எண்கள் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ‘போலீஸ் அக்கா’ திட்டம் தொடங்கப்பட்டது.






இந்த திட்டத்தில் ‘காவல்உதவிசெயலி’ பெண்களுக்கு உதவுவதற்காக பிரபலப்படுத்தப்பட்டு, புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024ம் ஆண்டில் 1,64,337 பயனர்கள் காவல் உதவி செயலியில் பதிவு செய்துள்ளனர். 649 போக்சோ வழக்குகளில் தண்டனை பெற்று தரப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஏஐ தொழில்நுட்பத்தில் கோவை பம்புசெட்: பழுதை முன்கூட்டியே அறியலாம்



கோவை, ஏப்.30

கோவையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு, மோட்டார், பம்பு செட் உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன. இதனை நம்பி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பணி புரிந்து வருகின்றனர். மோட்டார், பம்புசெட்கள் வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பல்வேறு துறைகளில் ஆதிக்கம் செலுத்தும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பம்ப் மோட்டார் துறையிலும் பயன்படுத்தினால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும் என தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாகஸ்டார்ட் அப் இந்தியாவின் மெண்டர் ஜெய்பிரகாஷ் கூறியதாவது:

ஏஐ தொழில்நுட்பம் பம்ப் மோட்டார் இயந்திரங்களில் அதிர்வு, வெப்பம், மின் நுகர்வு உள்ளிட்ட பல்வேறு தரவுகளை பகுப்பாய்வு செய்து, இயந்திரங்கள் எப்போது பழுதடையக் கூடும் என்பதை முன் கூட்டியே கணிக்க முடியும். இதனால் திடீர் பழுதுகள் குறைந்து, தொழிற்சாலைகளில் இடையூறு இல்லாமல் செயல்பாடுகள் தொடர்ந்து நடைபெற முடிகிறது. இத்தொழில்நுட்பம் மூலம் குறைந்த செலவில் அதிக பயனை பெற முடியும். சக்தி நுகர்வை கணித்து, தேவைக்கேற்ப இயந்திரங்கள் செயல்பட வழிவகுக்கிறது. ஒவ்வொரு பம்ப் மோட்டாரின் செயல்திறனை உயர் அளவில் பராமரிக்கிறது. பாதுகாப்பையும், தர உறுதியையும் அதிகரிக்கிறது.

ஓடிஎஸ் என்ற தயாராக கிடைக்கும் தொழில்நுட்ப தீர்வுகளை விரைவாக நிறுவ முடியும். குறைந்த செலவில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த உதவுகிறது. நிலைத்தன்மை மற்றும் பராமரிப்புக்கு நிறுவனர் நிறுவனங்களின் ஆதரவை வழங்குகிறது. ஏஐ மற்றும் ஓடிஎஸ் இரண்டும் இணைந்தால் பம்ப் மோட்டார் துறையில் ஒரு புதிய நிலை ஏற்படுகிறது. தானாகவே செயல்படும் பம்ப் மோட்டார் அமைப்புகள் மூலம் சிக்கனமான சக்தி நுகர்வு, பிழையின்றி, தரமான உற்பத்தி, பாதுகாப்பான தொழில்நுட்பம் மற்றும் அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப செயல்படத்தக்க மாடல்கள் உள்ளிட்டவைகளை செய்ய முடியும்.

பல்வேறு முன்னணி நிறுவனங்கள் பம்பு மோட்டார் தொழிலில் ஏஐ தொழில் நுட்பத்தை பயன்படுத்தி வருகின்றன. இது இந்திய உற்பத்தித் துறையில் ஒரு புதிய ஏற்றத்தை உருவாக்கும். இந்தநவீனதொழில்நுட்பத்தின் வாயிலாக, குறைந்த செலவில் அதிக செயல்திறனை அடைய முடிகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பூரில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தை சேர்ந்த 59 பேர் கைது: கொள்கை விளக்க குறிப்பில் தகவல்



சென்னை, ஏப்.30

சட்டப்பேரவையில் நேற்று காவல்துறை மானிய கோரிக்கையின் போது தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்க குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தீவிரவாத தடுப்புக்குழு 2024ம் ஆண்டு தமிழக காவல்துறையில் தொடங்கப்பட்டது. இந்தபிரிவுக்கு சென்னை, கோவை, மதுரை பகுதிகளில் காவல் நிலையங்கள் உள்ளன. இந்த தீவிரவாத தடுப்புக் குழு 2012ம் ஆண்டு குண்டுவெடிப்பு வழக்கு ஒன்றில் தொடர்புடைய பிரபல குற்றவாளி ஒருவருக்கு ஆயுள் தண்டனை பெற்று தரப்பட்டது. கோவை மற்றும் நாகர்கோவில் வழக்குகளில் தொடர்புடைய 2 ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாக இருந்த 5 குற்றவாளிகள் தீவிரவாத தடுப்பு குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.

கோவையில் நடத்திய அதிரடி சோதனையில் சட்டவிரோதமாக உபயோகப்படுத்தப்படாத ரவைகளுடன் நாட்டு துப்பாக்கி வைத்திருந்த 3 பேர் கைது செய்யப்பட்டனர். கோவை தீவிரவாத தடுப்பு குழுவினர் திருப்பூரில் கடந்த 12.1.2025 மற்றும் 25.1.2025 ஆகிய நாட்களில் நடத்திய அதிரடி சோதனையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசநாட்டை சேர்ந்த 59 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், இந்த குழுவினர் 9.10.2024 அன்று தீவிரவாத கொள்கைகளை பின்பற்றிவந்த 13 பேருக்கு மனநல மருத்துவர் உதவியோடு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இன்று சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் டோக்கன் வழங்க ஏற்பாடு: பத்திரப்பதிவுத் துறை அறிவிப்பு



சென்னை, ஏப்.30

ஏப்.30ம் தேதி சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் டோக்கன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பத்திரப்பதிவுத் துறை அறிவித்துள்ளது. ஏப்.30ல் அதிக அளவில் பத்திரப் பதிவு நிகழும் என்பதால் கூடுதல் டோக்கன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகத்துக்கு 150 டோக்கன், 2 சார்பதிவாளர் அலுவலகத்துக்கு 300 டோக்கன் வழங்க ஏற்பாடு. கூடுதலாக 4 தட்கல் டோக்கன் தரப்படும்.

# ஆன்லைன் மூலம் சைபர் குற்றவாளிகள் தமிழகத்தில் 2024ம் ஆண்டு பொதுமக்களிடம் ரூ.1,674 கோடி மோசடி: குற்றவாளிகளின் 20,453 சிம் கார்டுகள் முடக்கம்



சென்னை, ஏப்.30

ஆன்லைன் மூலம் பொதுமக்களிடம் சைபர் குற்றவாளிகள் தமிழகத்தில் 2024ம் ஆண்டு மட்டும் ரூ.1,674 கோடி மோசடி செய்துள்ளனர். மேலும்குற்றவாளிகளின் 20,453 சிம்கார்டுகள் முடக்கப்பட்டுள்ளது. சட்டப்பேரவையில் இன்று காவல்துறை மானிய கோரிக்கையின் போது தாக்கல் செய்யப்பட்ட கொள்கை விளக்க குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: ஆன்லைன்மூலம் பொதுமக்களிடம் பல்வேறு தவறான தகவல்கள் மூலம் பணம் மற்றும் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்டதாக 2024ம் ஆண்டு சைபர்க்ரைம் உதவி எண் 1930க்கும் 2,68,875 அழைப்புகள் பெறப்பட்டுள்ளது. மேலும், 2024ம் ஆண்டில் நிதி மோசடிகளில் தொடர்பாக 34,392 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய இணையவழி குற்றத்தடுப்பு அறிக்கையில் 1,27,065 புகார்களும், அவற்றில் 4,326 புகார்கள் மீது எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 80,206 புகார்கள் மீது சிஎஸ்ஆர் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2024ம் ஆண்டு இணையவழி மோசடிகளில் ரூ.1,674 கோடி பொதுமக்கள் இழந்துள்ளனர். அதில் 772 கோடி முடக்கப்பட்டு, சுமார் ரூ.83.34 கோடி பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்டது. மோசடி சம்பவங்களில் ஈடுபடும் குற்றவாளிகளிடம் இருந்து 20,453 சிம் கார்டுகள் முடக்கப்பட்டுள்ளன.

மேலும் பல்வேறு சட்டவிரோத மற்றும் மோசடி இணையதளங்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கை மூலம் 52 இணையதளங்கள், 274 யூடியூப் சேனல்கள், 837 பேஸ்புக் பக்கங்கள், 608 இன்ஸ்டாகிராம் பக்கங்கள், 55 டிவிட்டர் பக்கங்கள், 3 கூகுள் பிளேஸ்டோர் போலி கடன் செயலிகள் முடக்கப்பட்டுள்ளது. மேலும், குற்றவாளிகள் பயன்படுத்திய 66,217 சர்வதேச செல்போன் கருவி அடையாள எண் (ஐஎம்இஐ) முடக்கப்பட்டு, 48,031 செல்போன்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 16,317 செல்போன்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மதுரை அருகே மேலூரில் காலையில் வறுத்தெடுத்தது வெயில் மாலையில் கொட்டித் தீர்த்தது மழை



மேலூர், ஏப்.30


மேலூர் சுற்றுவட்டார பகுதியில் 1 மணி நேரம் பெய்த கோடை மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. இதனால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கிடாரிபட்டியில் வேரோடு மரம் சாய்ந்து தகர கொட்டகை மீது விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் கொளுத்தி வருகிறது. பகல் வேளையில் நடமாட மக்கள் தயங்குகின்றனர். இருப்பினும் மேலூர் பகுதியில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் நேற்று மேலூர் சுற்றுவட்டார பகுதிகளான தெற்கு தெரு, நரசிங்கம்பட்டி, தும்பைப்பட்டி, கீழையூர், மேலவளவு, கிடாரிப்பட்டி, அழகர்கோவில் பகுதியில் பலத்த மழை பெய்தது. மாலை 6 மணியிலிருந்து இரவு 7 மணி வரை ஒரு மணிநேரம் பெய்த பலத்த மழையால் சாலைகள், தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

இந்த மழைக்கு கிடாரிபட்டியில் ஆசாத் கான் என்பவரது வீட்டு முன்பு இருந்த பெரியபுளியமரம் வேரோடு சாய்ந்து தகரக் கொட்டகை மீது விழுந்தது. கொட்டகையில் யாரும் இல்லாததால் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது. காற்றுடன் பெய்த மழையால் பொதுசுக்காம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் மின்தடை ஏற்பட்டது. நீண்ட நேரமாகியும் மின்தடை சரி செய்யப்படாததால் ஆத்திரமடைந்த மக்கள் 30க்கும் மேற்பட்டோர் திரண்டு சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்து வந்த மேலூர் போலீசார் மற்றும் மின்வாரிய அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து மறியலை கைவிட்டனர்.

இதனால் சிறிதுநேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கொட்டி தீர்த்த கோடை மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றாத அரசு அதிகாரிகளால் நீதிமன்றத்தின் நேரம் வெகுவாக வீணடிப்பு : ஐகோர்ட் வேதனை



சென்னை, ஏப்.30

நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றாத அரசு அதிகாரிகளால் நீதிமன்றத்தின் நேரம் வெகுவாக வீணடிக்கப்படுவதாக, வழக்கு விசாரணையின் போது சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வேல்முருகன் வேதனை கருத்து தெரிவித்துள்ளார். நிலம் எடுப்பான பற்றிய இழப்பீட்டை உயர்த்தி தர நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தவில்லை என வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் நீதிபதி, “நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாத அரசு அதிகாரி மீது எந்த கருணையும் காட்ட முடியாது. 60% நீதிமன்ற நேரம் அரசு அதிகாரிகள் தொடர்பான வழக்குகளிலும், 25% அரசியல் வாதிகள் தொடர்பான வழக்குகளிலும் செலவிடப்படுகிறது, வெறும் 7% நேரம் மட்டுமே பொதுமக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் நிலை உள்ளது,” இவ்வாறு தெரிவித்தார்.

# தமிழ்நாடு முழுவதும் மாவட்ட நீதிபதிகள் 77 பேரை பணியிட மாற்றம் செய்து சென்னை உயர் நீதிமன்ற பதிவாளர் அறிவிப்பு



சென்னை , ஏப்.30

தமிழ்நாடு முழுவதும் மாவட்ட நீதிபதிகள் 77 பேரை பணியிட மாற்றம் செய்து சென்னை உயர் நீதிமன்ற பதிவாளர் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் வரும் மே 13ம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என கோவை மகளிர் நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில், அந்த நீதிமன்ற த்தின் நீதிபதி நந்தினி தேவியும் பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

# ஒட்டன்சத்திரம் சந்தைக்கு வெண்டை வரத்து அதிகரிப்பு: விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலை



ஒட்டன்சத்திரம், ஏப்.30

ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தைக்கு வெண்டை வரத்து அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தை மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இங்கிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் காய்கறி விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளான இடையகோட்டை, கள்ளிமந்தையம், ஸ்ரீராமபுரம், புதுச்சத்திரம், அம்பிளிக்கை, விருப்பாட்சி உள்ளிட்ட பகுதிகளில் தற்போது விவசாயிகள் வெண்டைக்காய் அதிக அளவில் பயிரிட்டுள்ளனர்.

இதனால் சந்தைக்கு வெண்டை வரத்து அதிகரித்து விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: சென்ற மாதங்களில் ஒரு கிலோ வெண்டை ரூ.35 முதல் ரூ.40 வரை விற்கப்பட்டது. ஆனால் தற்போது ஒரு கிலோ ரூ.12 முதல் ரூ.10 வரை சரிந்துவிட்டது. போதிய விலை கிடைக்காததால் வேதனை அடைந்துள்ளோம் என்று தெரிவித்தனர்.

# தமிழ்நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், மே 13ம் தேதி தீர்ப்பு அளிக்கிறது: கோவை மகளிர் நீதிமன்றம்



கோவை , ஏப்.30

தமிழ்நாட்டையே உலுக்கிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில், மே 13ம் தேதி தீர்ப்பு அளிக்கிறது கோவை மகளிர் நீதிமன்றம். அதிமுக ஆட்சி காலத்தில் நடந்த இக்கொடூர சம்பவத்தில், 9 பேரை கைது செய்தது சிபிஐ. அவர்கள் மீது 13 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
30.4.2025

# வெளிமாநில தொழிலாளர்களை கண்காணிக்க விரைவில் அடையாள அட்டை அளிப்பதை அரசு பரிசீலிக்கும்: பேரவையில் அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்

சென்னை, ஏப்.30

தமிழக சட்டப் பேரவையில் நேற்று காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பண்ருட்டி வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி) பேசுகையில், ''தமிழக காவல் துறைக்கு பெரிய தலைவலியாக இருப்பது, வெளி மாநில தொழிலாளர்களின் வருகை. இதுகுறித்த கண்காணிப்பு முறையை உருவாக்க வேண்டும்'' என்றார்.



அமைச்சர் சி.வி. கணேசன்: ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலும் அதற்கான போர்ட்டலில் பதிவு செய்யப்படுகிறது.

இணை ஆணையர் அலுவலகம், உதவி ஆணையர் அலுவலகம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் வெளிமாநில தொழிலாளர்களுடைய வருகை குறித்த விவரம், அதாவது, எவ்வளவு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம் பதிவு செய்யப்படுகிறது. அது மட்டுமல்லாமல், உரிமையாளர்கள், அதாவது நகைக் கடை உரிமையாளர்கள், வணிகக் கடை உரிமையாளர்கள் ஆகியோரும் எந்த மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களது கடைகளில் பணிபுரிகிறார்கள் என்பதை பதிவு செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது பற்றி விரைவில் அரசு பரிசீலிக்கும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# சொத்து குவிப்பு வழக்கிலிருந்து அமைச்சர் ஐ.பெரியசாமி விடுவிப்பு ரத்து

சென்னை, ஏப்.30

அமைச்சர் ஐ.பெரியசாமி கடந்த 2006 முதல் 2010ம் ஆண்டு வரை வருவாய், சட்டம், சிறை மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சராக இருந்த போது 2 கோடியே 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக அவர், அவரது மனைவி பி.சுசீலா, தற்போதைய பழனி திமுக சட்டமன்ற உறுப்பினரும், மகனுமான பி.செந்தில்குமார், மற்றொரு மகன் பி.பிரபு ஆகியோர் மீது திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் கடந்த 2012ம் ஆண்டு வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கை விசாரித்த திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட 4 பேரையும் விடுவித்துதீர்ப்பளித்தது.



இந்த தீர்ப்பை ரத்து செய்ய கோரி திண்டுக்கல் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறை சென்னை உயர்நீதி மன்றத்தில்கடந்த 2018ம் ஆண்டு அதிமுக ஆட்சியின்போது மேல் முறையீடு செய்தது. இந்த மேல் முறையீட்டு வழக்கை விசாரித்த நீதிபதி பி. வேல்முருகன், சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து அமைச்சர் ஐ. பெரியசாமி, அவரது மனைவி சுசீலா, மகன்கள் செந்தில்குமார் மற்றும் பிரபு ஆகியோரை விடுவித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது என்றும், வழக்கில் விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டு பதிவு செய்து விசாரணையை தினந்தோறும் நடத்தி 6 மாதத்தில் முடிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

# சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு: சித்திரை மாதத்தையொட்டி பதிவுத்துறை நடவடிக்கை

சென்னை, ஏப்.30

பதிவுத்துறை தலைவர் வெளியிட்ட அறிக்கை: மங்களகரமான தினங்களில் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணப்பதிவு கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது சித்திரை மாதத்தின் மங்களகரமான தினமான நாளை அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

இதை ஏற்று, சித்திரை மாதத்தின் மங்களகரமான தினமான நாளை ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுக்கு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# இந்தி படம் பார்த்து கொள்ளையடிக்க வந்தவர்களை ஜேம்ஸ்பாண்ட் பட ஸ்டைலில் செயல்பட்டு குற்றவாளிகளை பிடித்த சென்னை போலீஸ்: செல்வப்பெருந்தகை பாராட்டு

சென்னை, ஏப்.30

தமிழக சட்டப் பேரவையில் நேற்று காவல் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு ஸ்ரீபெரும்புதூர் செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்) பேசியதாவது: தமிழ்நாட்டில் காவல் துறை எதைச் செய்தாலும் தவறு, குற்றம் என்று சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் சமீபத்தில் வட மாநிலத்தில் வந்த வழிப்பறி கொள்ளையர்கள் தங்கள் கைவரிசையை காட்டினர். அவர்கள் இந்தி திரைப்படத்தில் வருவதைப் போல, தங்களுடைய



உடைகளையெல்லாம் மாற்றிக்கொண்டு ஒருவன் விமானத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறான். ஒருவன் டிக்கெட் வாங்கும் கவுன்டரில் நின்று கொண்டிருக்கிறான். ஒருவன் ரயில் மூலமாக ஓங்கோல் வழியாகச் சென்று கொண்டிருக்கிறான். ஆனால், தமிழக காவல் துறை விமானத்துக்குள் சென்று, இருக்கையிலே கைது செய்து வெளியிலே இழுத்து வருகிறார்கள். இன்னொரு காவல் துறை ஆய்வாளர் வரிசையிலே நின்று டிக்கெட் வாங்க இருந்தவனை கைது செய்கிறார். மற்றொருவரை ஓங்கோலூரிலே கைது செய்கிறார்களென்றால், தமிழக காவல் துறை எவ்வளவு திறமையாகச் செயல்படுகிறது என்பதை பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் உங்களுடைய கைவரிசையைக் காட்ட முடியாது என்று ஹாலிவுட் திரைப்படத்தில் வருவதைப்போல கைது செய்கிறார்கள். இந்தி திரைப்படத்தைப் பார்த்துவிட்டு, இங்கு கொள்ளையடிக்க வருகிறார்கள். தமிழக காவல் துறையினர் ஆங்கில திரைப்படத்தைப் பார்க்கிறார்கள். ஏனென்றால், நாம் இந்தியை பெரிதாக பார்ப்பதும் கிடையாது, படிப்பதும் கிடையாது. ஆங்கிலத்தை கற்றுக் கொண்டதால் காவல் துறை அதிகாரிகள் ஆங்கில திரைப்படம் போல் ஜேம்ஸ் பாண்ட்' திரைப்படம் மாதிரி கையாண்டிருக்கிறார்கள். ஆங்கிலம் திரைப்படத்தைப் பார்த்தவர்கள் கயவாளிகளைக் கைது செய்கிறார்கள். இந்தி திரைப்படத்தை பார்த்தவர்கள் கோட்டை விடுகிறார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# அரசு ஊழியர் நலனுக்கான முதல்வரின் அறிவிப்புகளுக்கு மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்பு

சென்னை, ஏப்.30

அரசு ஊழியர் நலனுக்கான முதல்வரின் அறிவிப்புகளுக்கு மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரவை விதி எண் 110ன் கீழ், அரசு ஊழியர்கள்,

ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் முதல்வர் 9 அறிவிப்புகள் வெளியிட்டு இருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. பல்லாண்டுகளாக போராடி வரும்



அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் இவை நம்பிக்கையூட்டும் அறிவிப்புகளாகும்.

கொரோனா தொற்று காலத்தில் நிறுத்தப்பட்ட விடுப்பு நாட்களை 15 நாட்கள் வரை சரண்டர் செய்து 1.10.2025 முதல் பணப்பயன் பெற்றுக் கொள்ள வழிவகை, 112025 முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு இருப்பது போல தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் ஆகியோருக்கும் 2 சதவிகித அகவிலைப்படி உயர்வு, பெண் பணியாளர்களுக்கான மகப்பேறு விடுப்பு 172024 முதல் ஓராண்டாக உயர்வு, மகப்பேறு விடுப்பு காலமும் தகுதிகாண் பருவம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் உள்ளிட்ட முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்புகள் வரவேற்கத்தக்கதாகும்.

# கொடநாடு கொலை வழக்கில் ஜெயலலிதா உதவியாளர் பூங்குன்றனுக்கு சம்மன்: மே 6ம் தேதி ஆஜராக உத்தரவு

கோவை

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றனுக்கு சிபிசிஐடி போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். நீலகிரி மாவட்டம் கொடநாட்டில் உள்ள ஜெயலலிதாவின் எஸ்டேட், பங்களாவில் நடந்த கொலை, கொள்ளை தொடர்பான வழக்கில் சிபிசிஐடி போலீசார் மறு விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த வாரம் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் சயான் மற்றும் அமமுக பிரமுகர் கர்சன் செல்வம் ஆகியோரிடம் கோவையில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் தனித்தனியாக விசாரணை நடைபெற்றது.

கேள்விகளுக்கு அவர்கள் அளித்த பதில்கள் வீடியோவாக பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நேர்முக உதவியாளராக இருந்த பூங்குன்றனுக்கு கோவை



சிபிசிஐடி போலீசார் சம்மன் அனுப்பி உள்ளனர். அதில், அவரை வரும் 6ம் தேதி கோவை காந்திபுரத்தில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர்.

# 'டான்'களுக்கு ஜோடியாக நடிப்பது ஏன்? ஸ்ரீநிதி ஷெட்டி விளக்கம்



கன்னடத்தில் வெளியாகி இந்திய சினிமாவையே திரும்பி பார்க்க வைத்த படம், 'கே.ஜி.எப்.'.இதன்இரண்டாம்பாகமும்வெளியாகிமிகப்பெரியவசூல்வேட்டையை நடத்தியது. 'கே.ஜி.எப்.' படத்தின் 2 படங்களிலும் நாயகியாக நடித்து கவனம் ஈர்த்த, ஸ்ரீநிதி ஷெட்டி தமிழில் விக்ரமுடன் 'கோப்ரா' படத்திலும் நடித்திருந்தார். தற்போது நானி ஜோடியாக அவர் நடித்துள்ள 'ஹிட்3' படம் விரைவில் வெளியாக இருக்கிறது.

இதற்கிடையில் பட விழாவில் கலந்துகொண்ட ஸ்ரீநிதி ஷெட்டியிடம், 'கே.ஜி.எப்' படத்தில் யாஷ், 'கோப்ரா' படத்தில் விக்ரம், 'ஹிட்3' படத்தில் நானி என 'டான்' கதாபாத்திரங்களுக்கு ஜோடியாக நடிப்பது ஏன்? இது உங்கள் ஆசையா? என்று கேட்கப்பட்டது.

அதற்கு பதில் அளித்த ஸ்ரீநிதி ஷெட்டி, "அதுமாதிரியான கதாபாத்திரங்கள்தான் என்னை தேடி வருகிறது. அது ஏன்? என்று எனக்கும் தெரியவில்லை. ஆனால் இதுவும் ஒருமாதிரியாக நல்லாவே இருக்கிறது. 'டான்' ஆக நடிப்போருக்கு நாம் ஜோடி சேருவதுசிறப்புதானே...அந்த'டான்'நம்கைவசம்என்றுநினைக்கும்போதுமகிழ்ச்சி. அதனால் சரி போகட்டும் என்று விட்டுவிட்டேன்" என்று கலகலப்பாக பதில் அளித்தார்.

# பி.சி.ஸ்ரீராமை கொண்டாட விழா எடுக்க வேண்டும் இயக்குனர் வசந்தபாலன்

ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம் இயக்கிய 'மீரா' படத்தின் கதாசிரியரும் 'அழியாத கோலங்கள் 2' படத்தின் இயக்குநருமான எம் .ஆர் .பாரதி இயக்கத்தில் புதுமுகங்கள் ஜீவா, ஹரிஷா, பிரபு சாஸ்தா, இந்திரா மற்றும் பலர் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'ட்ரீம் கேர்ள்'. இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசிய இயக்குநர் வசந்தபாலன், "மீரா படத்தில் நான் உதவி எடிட்டராக பணியாற்றினேன். அப்போது எடிட்டர் லெனின் விஜயனைப் பார்க்க அடிக்கடி பிசி ஸ்ரீராம் சார் அங்கே வருவார். அவர் ஒளிப்பதிவில் எடுக்கப்பட்ட படத்தின் காட்சிகளைப் பார்த்து எனக்கு வியப்பாக இருக்கும்.இசைஞானி இளையராஜாவுக்கு சற்றும் குறைவில்லாத பெருமைக்குரியவர் ஒளிப்பதிவு மேதை பி. சி.. ஸ்ரீராம் அவர்கள். இவர் படத்தில் இவரது ஒளிப்பதிவில்தான் நாம் அதுவரை பார்த்த சாதாரண வீடு கூட அழகாகத் தெரிந்தது. வீடு இவ்வளவு அழகாக இருக்கிறது என்று இவரது 'மௌன ராகம் 'படத்தைப் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் .ஒரு காட்டன் புடவையைக் கூட அழகாகக் காட்ட முடியுமா என்று நான் வியந்தேன்.




'திருடா திருடா 'படத்தின் 'தீ தீதித்திக்கும் தீ' பாடலில் நாம் இதுவரை பார்த்த எழும்பூர் மியூசியத்தைக் கூட அவ்வளவு அழகாக காட்டியிருப்பார். கமலா தியேட்டரில் அந்தப் படத்தை பார்த்தேன்.அந்தப் பாடலில் விளக்குகள் அணைந்து எரியும்போது அந்த அவரது ஒளி ஜாலத்தைப் பார்த்து திரையரங்க ரசிகர்கள் கைதட்டினார்கள். மீண்டும் பார்த்தபோது அதே காட்சியில் கைதட்டினார்கள்.வசனங்கள், நடிப்பு எல்லாவற்றையும் கடந்து ஒளிப்பதிவுக்குக் கைத்தட்டல் பெற்றவர் இந்த ஒளிப்பதிவு மேதை. அப்படி தனது ஒளிப்பதிவின் மூலம் சிறப்பு சேர்த்தவர் இங்கே வந்திருக்கிறார். இன்று இந்தியாவின் தலைசிறந்து விளங்கும் பல ஒளிப்பதிவாளர்கள் அவர் மூலம் வந்தவர்கள் .

அவர்ஒளி அமைப்பின்மூலம்கவிதை எழுதியவர்.அதன்மூலம்ஒரு மாயாஜாலம்நிகழ்த்தியவர்.ஒளியாலும் கதை சொல்ல முடியும் என்று நிரூபித்தவர் .அவரது 'குருதிப்புனல்' ,'அக்னி' நட்சத்திரம் போன்ற படங்கள் எந்த ஏஐயும் இல்லாத அந்தக் காலத்திலேயே 35 எம் எம் பிலிமில் அசத்தியவர் .'அலைபாயுதே', 'ஓகே கண்மணி', 'சீனி கம் ' வரை அவர் தனது மேதைமையான ஒளிப்பதிவைக் காட்டியவர்.பெரிய மாயாஜாலம் நிகழ்த்தியவர். இவர் தமிழ் சினிமாவால் கொண்டாடப்பட வேண்டிய ஒருவர்.சினிமா மேதைகளைக் கொண்டாடவேண்டும்.விரைவில்இவருக்கானவிழாஎடுக்கவேண்டும்என்றும்இந்தமேதைகொண்டாடப்பட வேண்டும் என்றும் இதன் மூலமாக வேண்டுகோள் விடுக்கிறேன். கவனிப்பாரற்று கிடந்த எம்ஜிஆர் திரைப்படக்கல்லூரிக்கு டிராட்ஸ்கி மருது அவர்கள்பொறுப்பேற்ற போது நான்மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். கல்லூரிக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கும் செய்தியை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இனி திரைப்படக் கல்லூரிக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கும் என்று நம்புகிறேன்" என தெரிவித்தார்.

இந்திய திரையுலகின் புகழ்பெற்ற ஒளிப்பதிவாளர்களில் ஒருவர் பி.சி.ஸ்ரீராம். தமிழில் பூவே பூச்சுடவா, மவுன ராகம், நாயகன், தேவர் மகன், காதல் தேசம், அலைபாயுதே உள்ளிட்ட பல படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். தெலுங்கு, இந்தி, மலையாளத்திலும் நிறைய படங்களில் பணியாற்றி இருக்கிறார். விக்ரம் நடித்த மீரா, கமல்ஹாசன் அர்ஜுன் இணைந்து நடித்த குருதிப்புனல் மற்றும் வானம் வசப்படும் ஆகிய படங்களை டைரக்டு செய்துள்ளார்.

# ஐபிஎல்:மும்பை வீரர் பும்ரா புதிய சாதனை



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் நேற்று மாலை 3.30 மணிக்கு மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடைபெற்ற 45வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள்மோதின. இதில் டாஸ் வென்ற லக்னோ அணியின் கேப்டன் ரிஷப் பண்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி

20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ரன்கள் எடுத்தது. அதிரடியாக விளையாடி அரைசதம் கடந்த சூர்யகுமார் யாதவ்(4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்) 28 பந்துகளில் 54 ரன்கள் குவித்தார். லக்னோ அணியில் அதிகபட்சமாக மயங்க் யாதவ் மற்றும் ஆவேஷ் கான் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து 216 ரன்கள் என்ற சவாலான இலக்கை நோக்கி லக்னோ அணி களமிறங்கியது. 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 161 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 54 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் பும்ரா அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார்.

இந்த நிலையில், இந்த போட்டியில் 4 விக்கெட்டுகள் வீழ்த்திய பும்ரா புதிய சாதனை படைத்துள்ளார். மும்பைக்கு அணிக்காக வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவின் விக்கெட் எண்ணிக்கை 174ஆக உயர்ந்தது.

இதன் மூலம் மும்பை அணிக்காக அதிக விக்கெட் எடுத்தவரான மலிங்காவின் (170 விக்கெட்) சாதனையை தகர்த்துள்ளார் .

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆக்கி: இந்திய பெண்கள் அணி மீண்டும் தோல்வி



இந்திய பெண்கள் ஆக்கி அணி 5 ஆட்டங்கள்கொண்ட தொடரில்விளையாட ஆஸ்திரேலியா சென்றுள்ளது.இதில் முதல் 2 ஆட்டங்களில் ஆஸ்திரேலிய 'ஏ' அணியுடனும், அடுத்த மூன்று ஆட்டங்களில் உலக தரவரிசையில் 5வது இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலிய சீனியர் அணியுடனும் மோதுகிறது.

இந்திய பெண்கள் ஆக்கி அணி, ஆஸ்திரேலியா 'ஏ' அணிக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் 35 என்ற கணக்கில் தோற்றிருந்தது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2வது ஆட்டம் நேற்று நடைபெற்றது. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் இந்தியா 23 என்ற கோல் கணக்கில் தோல்வியை தழுவியது.

அடுத்து இந்தியா ஆஸ்திரேலியா சீனியர் அணிகள் இடையே 3 ஆட்டங்கள் நடத்தப்படுகிறது. இதன் முதலாவது ஆட்டம் வருகிற 1ந் தேதி நடக்கிறது.

# ஐபிஎல்: 4 ஆயிரம் ரன்களை கடந்து சாதனை படைத்த சூர்யகுமார் யாதவ்



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் நேற்று மாலை 3.30 மணிக்கு மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடைபெற்ற 45வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற லக்னோ அணியின் கேப்டன் ரிஷப் பண்ட் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி

20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ரன்கள் எடுத்தது. அதிரடியாக விளையாடி அரைசதம் கடந்த சூர்யகுமார் யாதவ்(4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்) 28 பந்துகளில் 54 ரன்கள் குவித்தார். லக்னோ அணியில் அதிகபட்சமாக மயங்க் யாதவ் மற்றும் ஆவேஷ் கான் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

தொடர்ந்து 216 ரன்கள் என்ற சவாலான இலக்கை நோக்கி லக்னோ அணி களமிறங்கியது. 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 161 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 54 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி அபார வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் பும்ரா அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு வித்திட்டார்.

இந்தநிலையில், இந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வீரர் சூர்யகுமார் யாதவ் 34 ரன் எடுத்த போது ஐ.பி.எல்.ல் 4 ஆயிரம் ரன்களை (145 இன்னிங்ஸ்) கடந்தார். இதற்காக 2,714 பந்துகளை சந்தித்த சூர்யகுமார் 4 ஆயிரம் ரன்களை அதிவேகமாக எட்டிய 3வது வீரர் என்ற பெருமையை பெற்றார். முதல் இரு இடங்களில் கிறிஸ் கெய்ல் (2,658 பந்து), டிவில்லியர்ஸ் (2,658 பந்து) ஆகியோர் உள்ளனர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.